**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**24 மார்ச்சு 2020 சுற்றறிக்கை 2020இன் 4ஆம் இலக்கம்**

---

**கொவிட் -19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு உதவுவதற்கான சலுகை நடவடிக்கைகள்**

கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கான சலுகை நடவடிக்கைகள் தொடர்பில் அதிமேதகு சனாதிபதியால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு அமைவாக 2020.03.20 நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக, இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், குத்தகைக் கம்பனிகள் (இதன்பிறகு நிதியியல் நிறுவனங்கள் என குறித்துரைக்கப்படும்) என்பவற்றுக்கு இச்சுற்றறிக்கையை விடுக்கின்றது.

1. குறிப்பிடப்பட்ட அனைத்து நிதியியல் நிறுவனங்களும் கடன்களுக்கான (மூலதனம் மற்றும் வட்டி) காலதாமதத்தை கீழ்வருமாறு நடைமுறைப்படுத்தல் வேண்டும்:
   (அ) சுயதொழில் வழங்குநர்களால் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்தும் முச்சக்கரவண்டிகள், பாடசாலை வான்கள், லொறிகள், சிறியரக பண்டப்பறிமாற்று வாகனங்கள் மற்றும் பேருந்துகள் என்பவற்றுக்கான குத்தகைக் கட்டணங்களுக்கு 6 மாதக்கடன் காலதாமதம்;
   (ஆ) தனியார் துறையின் நிறைவேற்றுத்தரம் அல்லாத உத்தியோகத்தர்களின் தனியார் கடன்களுக்கு 2020.05.30 வரையிலான கடன் காலதாமதம்;
   (இ) ரூ.1 மில்லியனுக்குக் குறைவான தனியார் கடன்கள் மற்றும் குத்தகைகளுக்கு 3 மாதக் கடன் காலதாமதம்;
   (ஈ) சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பாதிக்கப்பட்ட தொழில் துறைகள், சுற்றுலாத்துறை, ஆடை, பெருந்தோட்டம், தொழில்நுட்பம் மற்றும் தொடர்புபட்ட வசதிச்சேவைகள் வழங்குநர்கள் ஆகியோருக்கு 6 மாத கடன் காலதாமதம்.

2. நிதியியல் நிறுவனங்கள் தொழிற்படு மூலதன தேவைப்பாடுகளை 4 சதவீத வட்டிவீதத்தில் வழங்குவதுடன் குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகளை மேலே 1 (ஈ) இல் குறிப்பிடப்பட்ட துறைகளுக்கு விலக்கழிப்பு செய்தல் வேண்டும். ஒரு வட்டி மானியம் மீள்நிதியீட்டலில் உள்ளடக்கப்படும்.

3. மேலே 1 மற்றும் 2 இல் குறிப்பிடப்பட்டவற்றுக்கான விண்ணப்பங்களை 2020.04.30 வரையில் சமர்ப்பிப்பதற்கு வாடிக்கையாளருக்கு கால அவகாசம் வழங்க நிதியியல் நிறுவனங்கள் வேண்டப்படுகின்றன. மேலும், அவற்றை 45 நாட்களுக்குள் நிறைவு செய்வதற்கும் வேண்டப்படுகின்றது.

நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

24 மாச்சு 2020 | சுற்றறிக்கை | 2020இன் 4ஆம் இலக்கம்

---

4. நிதி நிறுவனங்கள் ரூ.50,000 வரைக்குமான கடனட்டைகளிலான உள்ளூர் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஆக்ககூடிய வட்டிவீதமாக 15 சதவீதத்தினை அறவிடலாம்: கடனட்டைகள் மீதான ஆகக்குறைந்த மாதாந்தக் கட்டணம் 50 சதவீதத்தினால் குறைக்கப்படும். ரூ.50,000 இலும் குறைந்த உச்ச எல்லைககளைக் கொண்ட கடனட்டைகள் மீதான மீளச்செலுத்தல்களின் காலம் 2020.04.30 வரையில் நீடிக்கப்படும்.

5. உரிமம்பெற்ற வங்கிகள் ரூ.500,000 இற்கு குறைவான பெறுமதியைக் கொண்ட காசோலைகளின் செல்லுபடியான காலத்தினை 2020.04.30 வரை நீடிக்கவேண்டும்.

6. ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாத நாட்களில் உரிமம்பெற்ற வங்கிகளின் எல்லா கிளைகளும் காலை 8.00 மணியிலிருந்து பி.ப. 1.00 மணிவரை ஆகக்குறைந்த ஊழியர்களுடன் திறந்திருந்தல் வேண்டும் மற்றும் கூட்டிணைவுகளுக்கான கிளைகள், உணவு, மருந்து, பிரயாணம் மற்றும் ஏனைய வாடிக்கையாளர்களின் சர்வதேச கொடுக்கல்வாங்கல்களைச் செய்வதற்கு ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள வேலைகளிலும் திறந்திருக்க வேண்டும்.

7. இச்சுற்றறிக்கை தொடர்பான மேலதிக அறிவுறுத்தல்கள் 27.03.2020 அன்று வழங்கப்படும்.

ஒப்பம்

**பேராசிரியர். டபிள்யூ. டி. லக்ஷ்மன்**

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்,
நாணயச் சபையின் தலைவரும்